உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி—௫௰.] ஜய-௵—ஆனி-௴ [பகுதி—௮.
Vol. 50. June—July 1954. No. 8.

சிந்தாமணி விளக்கம்: சீவகன்பெயர்

திரு. நா. அப்பனையங்கார், தலைமையாசிரியர், தமிழ்ச்சங்கக்கலாசாலை.

(197-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, குணமாலையாரிலம்பகக் குறிப்புக்கள் சீவகன் பெயர்ப் பொருள் விளங்கச் சிறந்த துணைபுரிவன. தானும் உய்ந்து பிறரையும் உய்விக்கவல்லன் - சீவகன் என, அவன் பெயர்க்காரணம் முன்னர் இருவகையாக இயம்பப்பெற்றது. அவ் விரண்டு காரணமும் அடிப் படையாக எழுந்த வரலாறுகள், அடுத்தடுத்து நிகழ்ச்சிபெற்று இவ் விலம்பகத்தை அழகுசெய்கின்றன.

இராசமாபுரத்தில் இளவேனிற்பருவத்து நீர்விளையாட்டணி நிகழ்ந்தது. மைந்தரும் மகளிரும் வந்தொருங்கு ஈண்டினர். அவருள் சுரமஞ்சரி குணமாலை என இருமங்கையர், தம் தம் சுண்ணத்தின் பெருமை பேசி ஒருவர்க்கொருவர் மாறுபடலாயினர். [சுண்ணம்-நீராடு தற்கமைந்த வாசனைப்பொடி.]

கந்தயுக்தி பரீக்ஷை என்பது கலைவகைகளில் ஒன்று. நறுமணக் கலவையின் நன்மை தீமை ஆராய்வது அது. அக் கலையில் வல்லார் பலர், அவ் விருவர் சுண்ணத்தையும் பலவகையில் பரிசோதித்தனர்.

கண்டும் மோர்ந்தும் கையினால் தீண்டியும், ஒளியும் மணமும் ஊறும் இனியன இவை என, அவர் இரண்டினையும் பொதுவாகப் புகழ்ந்ததன்றி, அவற்றுள் வேற்றுமை தெரியும் ஆற்றலிழந்தனர். அது வல்லவன் சீவகன் ஒருவனே எனவும் அவர் ஒரேபடியாக உரைத்துவிட்டனர்.

அப்பொழுது சீவகன் அங்கே கலைகள் நிரம்பிக் கதிர்மதிபோலக் காட்சியளித்தனன்.

ஐயனே அறியும் என வந்தனம்
பொய்ய தன்றிப் புலமை நுணுக்கிநீ
நொய்தில் தேர்ந்துரை நூற்கடல்! என்றுதம்
கையினால் தொழுதார் கமழ் கோதையார் (885)

என்றதனால் அவனது கலையுணர்வின் ஆற்றல் இத்தகைத்தென இனிது விளங்கும்.

குணமாலை சுண்ணம் நல்லது; சுரமஞ்சரி சுண்ணம் அதிற்சிறிது அல்லது; என அவன் நன்கு தெளிவித்தான். கோடையில் இடித்ததும் மாரியில் இடித்ததும் ஆகிய வேறுபாடுடையன அவை, எனவும் அவன் நுண்ணிதின் விளக்கினான். அதுமட்டுமன்று. சோலையில் வாழும் சுரும்பினங்களை அழைத்தும், அவன் அரிதாகக் கரிபோக்கி அதனை மெய்ப்பித்தனன் என்பர். வண்டுகளோடு பேசும் பாஷையும் சீவகன் அறிந்த கலைகளில் ஒன்று! அவன் கல்லாத கலையே இல்லாதது என்னலாமன்றே?

சோலை மஞ்ஞை சுரமைதன் சுண்ணமும்
மாலை என்னும் மடமயில் சுண்ணமும் (893)

சால நல்லன; இவற்றுள்ளும் மிக்கதொன்றனைக் கைக்கொண்டு தக்கவாறு உண்மின்; என அவன் வண்டுகளை நோக்கி வார்த்தையாடினன். 'வேறு திருத்தற்கு இருவரையும் மயில் என்றான்' என்றார் இங்கு நச்சினார்க்கினியர். செப்பமுடைமையால் சிறந்தனன் சீவகன் என இக் கூற்றால் இனிது விளங்கும். [செப்பம்-நடுவு நிலைமை அறம்.]

இவ்வாறு சொல்லியவன், இருவர் சுண்ணத்தையும் இரு கையாலும் எடுத்து விண்ணிலே வீசினான். சுரமஞ்சரி சுண்ணத்தை வண்டுகள் உண்டில; குணமாலையுடையதைக் கொள்ளைகொண்டு உண்டன.

இவ்வாறு விஞ்ஞானத்தால் யாவரினும் மேம்பட்டனன் சீவகன். இது 'உலகினர் வாழ்வின் உயரிய எடுத்துக்காட்டு-சீவகன்'; என்னும் பெயர்ப்பொருள் விளக்கிற்று.

இங்ஙனம் சுண்ணபரிசோதனையில் சுரமஞ்சரி தோற்றாள். தோற்றவள் செய்தி மிகவும் விந்தையானது. ஏனெனில், விளையாத நிலத்தினில் அவளுக்கு வேட்கைவிளைந்த விபரீதமன்றோ? தன்னைக் கலையினால் தோல்வியுறச் செய்தவனைத் தான் காதலால் தோல்வியுறச் செய்யக் கருதினாள். 'என் சுண்ணம் குறை கூறினவன், தன் சொல் தோற்று வந்து, என் அடி தொழுமாறு நோற்பேன்;' என அவள் வஞ்சினங் கூறினள். அன்றியும் சீவகன்மீது அவளுக்கு எழுந்த செற்றம் ஆடவர் பிறர் அனைவர்மேலும் சென்றது.

> கண்ணின் ஆடவர்க் காணினும் கேட்கினும்
> உண்ண லேன்இனி என்று உரையாடினள். (902)

இதுகேட்ட அவள் தந்தை, அளவிலா நிதியால் அரசன் அனுமதி கொண்டு, அவள் கன்னிமாட மணைந்த எல்லையளவும் ஆண்மக்களைக் கடிந்தொழுகலாயினன். அங்குள்ள சித்திரப் பதுமைகளுங்கூட, ஆணொழித்துப் பெண்பாவைகளாகவே அமைக்கப் பெற்றன என்பர்.

அக் கன்னிமாடத்தே நோன்பாற்றியிருந்த அவள் காதற்சிறப்பைச் சிந்தாமணி அழகாகச் சித்திரித்துள்ளது.

> சென்று காலம் குறுகினும் சீவகன்
> பொன்னுஞ் சாகம் பொருந்திற் பொருந்துக
> அன்றி என்நிறை யாரழிப் பாரென
> ஒன்று சிந்தைய ளாகி ஒடுங்கினள். (908)

சுரமஞ்சரி தான் சீவித்தலின்றித் தன் வாழ்நாள் குறுகி மாய்வதாயினும், தன்னைச் சீவிக்கச் செய்ய வல்ல சீவகப்பெயருடையான் மார்பத்ஞாளின் சேர்ந்தாலல்லது, பிறர் எவரையும் நெஞ்சில் நினையாத நிறையுடன், உள்ளம் உரை செயல் யாவும் அவன் வசமாகி ஒன்றுபட்டு ஒடுங்கினாள்: என்பது இதன் நேர்ந்த பொருளாகும். இவ் விசித்திரக் காதலின் விளைபயன் மேல் சுரமஞ்சரியாரிலம்பகத்தில் துய்க்கப் பெறுகின்றது.

... ... நீண்டிலே னாயின் உய்யேன்
சீறடி பரவ வந்தே னருளெனத் தொழுது சேர்ந்து (2062)

எனச் சீவகன்செய்தி கூறினமையால், அங்குச் சுரமஞ்சரியின் வஞ்சினம் வாய்ப்பது மறவாமல் நினைந்து மகிழற்பாலது. இதனால் 'பிறரை வாழ்விப்பவன்-சீவகன்' என்ற பெயர்ப்பொருள் விளங்குதல் வெளிப்படை.

இப்பால் புதுநீர்விளையாட்டு நிகழ்ந்த புறநகர்ச் சோலையில், அந்தணர்க் காக்கிய சோற்றில் நாயொன்று வாய்வைத்தது. அறிவிலிகள் அதனை நையப்புடைத்துக் கொல்ல வலித்தனர். அப்போது அந்நாய்க்குரிய களிமகன் தோன்றி, அந்தணரைத் துன்புறுத்தினன். அதுகண்ட சீவகன் அக் களிமகன் அல்லல் களைந்து அந்தணர் அருந்துயரும் அகற்றினன் என்பர் (841).

இருதிறத்தாரும் ஏகியபின்னர் அந் நாயின்நெஞ்சில் மறமின்மை கண்ட சீவகன் அருளுடைமையால் அழுதான். குறிப்பால் அதன் உடன்பாடு தெரிந்து, ஐம்பதமாகிய மந்திரத்தை அதன் செவியினில் அவன் ஓதினன். அவ்வளவிலே அது நாயுடம்பு நீங்கி நல்லுடம்பு பெற்று, யாவரும் வியக்கத் தேவனாகி வானத்தில் மறைந்தது.

அத் தேவன், சங்கவெண்மலையில் சந்திரோதயம் என்னும் நகரில் சுதஞ்சணன் என்ற பெயருடன் இயக்கருள் இறைவனாகி விளங்கினன். தனக்கு நல்வாழ்வு தந்த சீவகன் நிலையை அவன் அவதிஞானத்தால் அறிந்து, மீண்டுவந்து வணங்கிநின்று தன் 'கைம்மாறு கொள்க' என வேண்டிக்கொண்டான்.

... ... பகவனது இறைமைபோல
மூடிஇவ் வுலக மெல்லாம் நின்னடித் தருவ லின்னே
ஆடியுட் பாவை போல்நீ அணங்கியது அணங்க என்றான். (957)

என்றது காணத்தக்கது. ஆடியுள் பாவைபோல நின்னடி மூடி, இவ்வுலகமெல்லாம் இன்னே தருவல்; எனக் கூட்டவேண்டும்.

இதனுள் 'ஆடியுட் பாவைபோல் நீ அணங்கிய தணங்க' என்றது காண்போர்செய்கைக்கேர்பச் செயல்புரியும் கண்ணாடியின் நிழற்படிவம் போல், உலகத்துயிர்களெல்லாம் நீ வருந்தினால் வருந்தி மகிழ்ந்தால் மகிழ்ந்து செயல் புரிய என்றவாறு.

'பகவனது இறைமைபோல நின்னடி மூடி இவ் வுலகமெல்லாம் இன்னே தருவல்' என்றது, எல்லாம்வல்ல இறைவனது ஆணை உலக முழுதும் உட்படுத்தி யிருப்பது போல, நின் அடிக்கீழ் உலகனைத்தை யும் வழிப்படுத்தி இப்பொழுதே தருவேன் என்றவாறு.

இங்ஙனம் இயக்கருள் இறைவன் எண்ணியது நிறைவேற இடையூறும் உளதாமோ? ஆயினும் இவ் வுதவியை உடனே ஏற்க உடன்பட வில்லை சீவகன். இதற்குரிய காரணம் மிகவும் வெளிப்படை. அவன் தான் பிறர்க்குப் பெருவாழ்வு தருவதல்லது, தான் பிறரால் அதுபெறு வது, தன் பெருந்தகைமையைச் சிறுமையுறுவிக்கும் என எண்ணி னன். சீவகப்பெயரின் சீர்மை சிதையாமல் பேணுதல் வேண்டுமன்றே? அதனால் அவ் வுதவியை அவன் சுதஞ்சணன்பால் நாடாமல், அவ னுக்கு இனிய உரைகளை இயம்பி விடுத்தனன். 'பகைவரால் எனக்கு இடுக்கண் நேரின், யான் விரும்பிய நண்பனே! அப்பொழுது நின்னை நினைப்பேன்; அன்றிப் பிறவாற்றால் ஒன்றும் குறைவிலேன்' என்றான் அவன்.

நாளொடு பக்கம் நைந்து வீழினும் வீழ்த லில்லாக்
கோளுடைக் கிழமை ஒப்பாய் குறைவிலன் பிறவின் என்றான். (958)

என்ற சிந்தாமணியடிகள் சிந்தனைக்குரியன. [நாள்-அசுவதி முதலிய நக்ஷத்திரம். பக்கம்-பிரதமை முதலிய திதி. கோள்-சூரியன் முதலிய கிரஹம். கிழமை-(உரிமையை யுடைய) தினம்.

'நாளொடு பக்கம் நைந்து வீழினும்' என்றது, நக்ஷத்திரமும் திதியும் தினத்துடன் நாழிகைத் தொடர்பால் ஒன்றுபட்டுப் பொருந் தாமல், முன்னும் பின்னும் தொடர்பு அற்றுக் குறைந்து கழியினும் என்றவாறு.

'வீழ்தலில்லாக் கோளுடைக் கிழமை யொப்பாய்' என்றது அங்ங னம் நாழிகைத் தொடர்பு குறைந்து கழியாமல், தினத்துடன் முழு தும் ஒன்றுபட்டுப் பொருந்தியுள்ள, கிரஹத்தின் உரிமைக்கு ஒப்பான உரிமையுடைய சுதஞ்சணனே! என்றவாறு. தினத்தோடு கிரஹத்தின் உரிமையாவது, 'ஞாயிற்றுக்கிழமை' 'திங்கட்கிழமை' என்றாற்போல, அவ்வத்தினங்களுடன் அவ்வக் கோளுக்குள்ள கிழமை. தினத்தோடு

கோளுக்குள்ள இச் சிறப்பான உரிமை பற்றியே அவை அவ்வக்கோளின் கிழமை எனப் பெயர் வழங்கலாயின. இதுவே இக்குக் 'கோளுடைக் கிழமை' எனப்பட்டது. இங்ஙனம் தினங்களுடன் கோள்களுக்குள்ள உரிமை போன்றது, சீவகனுடன் சுதஞ்சணனுக்குள்ள உரிமை என்பதாம்.

'குறைவிலன் பிறவின் என்றான்' என்றது இங்ஙனம் ஒருவர்கொருவர் வேற்றுமையில்லாத இயைபினால், யானே முடிக்கவிரும்பியிருக்கும் குறையன்றி, வேறாக நின்றால் எனக்கு முடிக்கப்பெறும் குறையும் உளதோ? எனச் சீவகன் கூறினன்; என்றவாறு.

இங்ஙனம் கூறக்கேட்ட சுதஞ்சணன், இனிதென்று இசைந்து தன் இருப்பிடம் சேர்ந்தான். இவ் வரலாற்றுக் குறிப்பினால், தான் பிறரை வாழ்விப்பதே யன்றித் தனக்கு அப் பிறர் உதவி வேண்டாமல், தானாகவே வாழ்வுபெறவும் வல்லவன்-சீவகன்; என்னும் பொருள் நயம் புலப்பட நின்றது. சீவகன் வாழ்வுக்குப் பிறருதவி வேண்டாத பெற்றியை, மேல் பதுமையாரிலம்பகத்திலும் தேவர் தெளிவித்துள்ளனர். 'சீவகனுக்குப் பகைவனைக் கெடுத்து, நிலமகளை உரிமையாக்கித் தருவோம்' என்று வெள்ளிமலையில் சந்திரோதய நகரில் சுதஞ்சணன் தேவியர் சொன்னவுடனே, அவன் அவரை நோக்கி, 'போர்க்களத்தில் என் பகைவனுயிரை யானே போக்குவேன்; அதனால் நிலமகள் என்னைத் தானாகவே சேரும் இவ் எளிய செயலுக்கு நீவிர் பெரிய எண்ணங் கொள்ள வேண்டா'; என்று இனிதாக இசைத்தனன்.

> செருநிலத் தவனுயிர் செகுத்து; மற்றெனக்கு
> இருநிலம் இயைவதற்கு எண்ண வேண்டுமோ

என்றது காணலாம்.

> கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன் றதனெதிர்
> கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று (புறம். 204)

என்னும் ஆன்றோர் மெய்ம்மொழி, உயரிய வாழ்வினில் உய்க்கும் நெறியாகும். இதனை உறுதியாகக் கடைப்பிடித்து நின்றனன் சீவகன். ஆதலின் 'உயரிய வாழ்வின் உரையாணி-சீவகன்'; என்னும் பொருளும் இதனால் விளங்கிற்று.

[தொடரும்]

கரிகாலர் மூவர்

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

புறநானூறு, அகநானூறு, பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, பழமொழி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கலிங்கத்துப்பரணி, மூவருலா, பெரியபுராணம், சோழமண்டல சதகம், செவ்வந்திப் புராணம், பண்டிதாராத்ய சரிதம் (தெலுங்கு), நவசோழர் சரிதம் (தெலுங்கு), பிரகதீஸ்வரர் மாகாத்மியம், மாலபேடு, கன்யாகுமாரி, அன்பில், திருவாலங்காடு ஆகிய இடங்களிற் கிடைத்த சாஸனங்கள் கரிகாலன் என்னும் பெயருடைய சோழமன்னனது வரலாறுரைப்பனவாம். கடைச்சங்ககாலத்துக் கரிகாலன் என்னும் பெயருடையாரைப்பற்றி ஆய்வதற்கு இவற்றுள் சங்கஇலக்கியங்களை நோக்குவாம்.

கரிகாலன் என்னும் மன்னனைப் பாடிய புலவர்கள் எண்மர். அவர்கள் கருங்குழலாதனார், கழாத்தலையார், வெண்ணிக்குயத்தியார், பரணர், மாமூலனார், முடத்தாமக்கண்ணியார், உருத்திரங்கண்ணனார், முன்றுறையரையனாராவர். கருங்குழலாதனார், கரிகாலன் வாழ்ந்திருந்தபோது அவனது வெற்றியைப் புகழ்ந்திருக்கிறார்; அவனுக்குக் கையறுநிலையும் பாடியிருக்கிறார் (புறம் 7, 224). வெண்ணிக்குயத்தியார் வெண்ணியில் நடந்தபோரில் கரிகாலன் கொண்ட வெற்றியையும் அவனது பகைவர் கொண்ட தோல்வியையும் குறித்திருக்கிறார். கழாத்தலையார் வடக்கிருந்த பெருஞ்சேரலாதனைப் பற்றிக் கூறியிருக்கிறார் (புறம் 65, 270, 288). பரணர் கரிகாலனது வாகைப்போரையும் வெண்ணிப்போரையும் (அகம் 18, 246) கூறியிருக்கிறார். அவரே அகம் 376ம் செய்யுளில் ஆட்டனத்தியைக் காவிரிகவர்ந்த செய்தியைக் குறித்திருக்கிறார். பரணரும் கழாத்தலையாரும் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியொடு போரிட்டு முடிந்த குடக்கோநெடுஞ்சேரலாதனைப் பாடியிருக்கின்றனர்.

இவற்றை நோக்கின், 'கருங்குழலாதனார் முந்தியவர்; வெண்ணிக் குயத்தியாரும் கழாத்தலையாரும் அவர் காலத்துப் பிற்பகுதியிலோ, உடனோ வாழ்ந்தவராவர். பரணர் கழாத்தலையார் காலத்துப் பிற் பகுதியில் வாழ்ந்தவர் ஆவர்' என்பது புலனும். மாமூலனார், பெருஞ்சேரலாதனைப்பற்றிக் கூறியிருப்பதனால் பரணர் காலத்தவ ராவர். பரணர் காலத்தும் அவர்க்குப் பிறகும் வாழ்ந்தவர் நக்கீ ராவர்.

பரணரும் பெருங்குன்றூர்கிழாரும் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியைப் பாடியுள்ளனர். பரணர் குடக்கோநெடுஞ்சேரலாதனை யும் பெருங்குன்றூர்கிழார் பெருஞ்சேரலிரும்பொறையையும் பாடி யுள்ளனர். ஆதலின் கழாத்தலையாருக்குப் பிற்பட்டவர் பெருங்குன் றூர் கிழார் ஆவர். பெருங்குன்றூர் கிழாரால் பாடப்பட்ட உருவப் பஃறேர்இளஞ்சேட்சென்னியின் மகனாகிய கரிகால்வளவனைப் பாடிய முடத்தாமக்கண்ணியார் கழாத்தலையாருக்குப்பிற்பட்டவராவர். உரு வப்பஃறேர் இளஞ்சேட்சென்னி கழாத்தலையார் காலத்து இல்லை என்பதும் இதனாற் புலனும். ஆதலின் கழாத்தலையாரால் பாடப் பெற்ற கரிகாலனும் முடத்தாமக்கண்ணியாரால் பாடப்பெற்ற கரி காலனும் இருவேறு மன்னராவர் என்பது புலனும்.

கரிகாலன் சேரபாண்டியரோடு போர்புரிந்தனன் எனப் பொருந ராற்றுப்படை குறிக்கிறது. கழாத்தலையார் முதலியோர் பாடல் கள் பெருஞ்சேரலாதனோடு மாத்திரம் கரிகாலன்பொருதனன் எனக் குறிக்கின்றன. பொருந ராற்றுப்படை சேரபாண்டியப் பெயர் குறிக்கவில்லை. வெண்ணிப்போரில் வேந்தரொடு பதினொரு வேளி ரையும் வென்றான் கரிகாலன் என்பர் பரணர். வாகைப்போரில் அவ னுக்கு ஒன்பது மன்னர் தோற்றனர் என்பர். இச் செய்திகளைப் பொருநராற்றுப்படை குறிக்கவில்லை ஆதலின் கருங்குழலாதனார் முதலியோர் குறித்த கரிகாலன் பொருநராற்றுப்படைத் தலைவன் ஆகான் என்பது வெளிப்படை.

இனி, 'பொருந ராற்றுப்படைத் தலைவனும் பட்டினப்பாலைத் தலைவனும் ஒருவனே' என்பதை ஆய்வோம். ஆற்றுப்படை கரிகாலன்

எனப் பெயர் குறிக்கிறது. பட்டினப்பாலை திருமாவளவன் எனப் பெயர் குறிக்கிறது. ஆற்றுப்படை கரிகாலன் தந்தை உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி எனக் குறிக்கின்றது. பட்டினப்பாலை திருமாவளவனின் தந்தை பெயர் குறிக்கவில்லை. தாய் வயிற்றிருந்து தாயம் எய்தினன் எனக் குறிக்கிறது ஆற்றுப்படை. பிணியகத்திருந்து பீடுகாழ்முற்றி, திண்காப்பேறி வாள்கழித்து ஊழிறைகிய தாயம் எய்தியவன் எனக் குறிக்கிறது பட்டினப்பாலை. சேர பாண்டியரை வென்றான் கரிகாலன் எனக் குறிக்கிறது ஆற்றுப்படை. தென்னவர், குடவர், வடவர், இருங்கோவேள், அருவாளர், ஒளியர், பொதுவர் ஆகியவர்களை வென்றான் திருமாவளவன் எனக் குறிக்கிறது பட்டினப்பாலை. கரிகாலனுக்குப் பெண்டிர் மக்கள் குறிக்கவில்லை ஆற்றுப்படை. திருமாவளவன் பொற்றொடிப் புதல்வர் ஓடியாடவும் முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவும், செஞ்சாந்து சிதைந்த மார்பினன் எனக் கூறுகிறது பட்டினப்பாலை. ஆதலின் இவ்விரு நூல்களும் குறிக்கும் மன்னர்கள் இருவேறு மன்னர்கள் என்பது வெள்ளிடைமலையாம்.

இவ் விரு நூல்களும் குறிக்கும் செய்திகள் வேறுபட்டிருப்பதற்குக் காரணம் கூறுவார் ஒருசிலர். ஆற்றுப்படை கரிகாலனது ஆட்சியின் முன்பகுதியிலும் பட்டினப்பாலை பின்பகுதியிலும் பாடப்பட்டதே காரணம் என்பர். "கூடுகெழீஇய குடிவயலினல்,.........தண்வைப்பின் நாடு குழீஇ......மறுவின்றி......ஒரு குடையான் ஒன்றுகூறப் பெரிதாண்ட பெருங்கேண்மை அறனொடு புணர்ந்த திறனறிசெங்கோல் அன்னோன் வாழி" என ஆற்றுப்படை குறிப்பதனால் முடத்தாமக் கண்ணியார் கரிகாலன் ஆட்சியிலிருந்து விலகிய காலத்தோ அல்லது இறுதிக் காலத்தோ பாடியிருக்க வேண்டும் என்பது தெள்ளிதின் புலனும். பட்டினப்பாலைத் தலைவனாகிய திருமாவளவனைக் கரிகாலன் என்பதோர் மரபுண்டு. ஆதலின் இவனை மூன்றாங்கரிகாலன் எனக் குறிக்கலாம்.

இமயப் பிடர்த்தலையில் கொடுவரிக்கொடி பொறித்தவனாகிய திருமாவளவன் கரிகாலனே என அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டிக் கூறுகின்றார். அத் திருமாவளன் இத் திருமாவளவனே யாதல் வேண்டும். சிலப்பதிகாரம் குறிப்பதுகொண்டு இதனைத் துணிதற்கும் இயலாது. சிலப்பதிகாரம் சேர சோழ பாண்டியர் மூவரும் இயமத்தில் தம் கொடி பொறித்ததாகக் கூறுகிறது. இச் செய்தியைச் சேரருக்குத்தான் உரியதாக்குகிறது சங்க இலக்கியம். அடியார்க்கு நல்லார், திருமாவளவன் கரிகாலனே என்பதற்குக் காட்டும் மேற்கோள்;

கச்சி வளைக்கச்சிக் காமகோட் டங்காவல்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன் — கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு என்பதாம்.

இச் செய்யுளில் குறிக்கப்படுபவன் கச்சியைத் தனக்கு உரிமையாக வுடைய கரிகாலன். பட்டினப்பாலை பாடிய உருத்திரக் கண்ணனாரால் இளந்திரையன் பாடப்பட்டான் ஆதலின் இம் மேற்கோள் பயனற்றதாம். கரிகாலனையும் இளந்திரையனையும் பாடியவர் ஒரேபெயரையுடைய இரு வேறுபுலவர்கள் ஆவர். திருமாவளவன் அருவாளரை வென்றான் எனப் பட்டினப்பாலை குறிப்பதனால் அவ் வெற்றிக்குப் பிறகு கச்சி வளவனுக்கு உரிமையானதாக இருந்திருக்கலாம் என இளந்திரையனது தோற்றத்திற்குக் கூறும் கதையையும் கருத்துட் கொண்டு நோக்கின் திருமாவளவன் இக் கரிகாலனாகலாம் என்பது புலனும்.

கம்பரும் துளஸிதாஸரும்

திரு. தி. சேஷாத்திரி அவர்கள், M. A., ஆசிரியர், மதுரைக்கல்லூரி.

(178-ம் பக்கத்தொடர்ச்சி)

நீயே தந்தை

தசரதமன்னனிடம் விசுவாமித்திரமுனிவர் இராமனை வேள்விகாக்கத் தந்தருள் என வேண்டியபோது தசரதன் வருந்தினான்; வேறு ஏதாவது கேட்டிருக்கக் கூடாதா? என்று அயர்ந்தான்; உள்நிலாவிய துயரம் பிடித்து உயிரை வெளியே உந்திற்று; அதனால் அது ஊசலாடிற்று. அந்த நிலையில் 'இராமன் சிறியன், நானே வருகிறேன்' என்று சொன்னான் அரசன். அதைக் கேட்டு முனிவர் முனிவுகொண்டார். இறுதிக்காலம் வந்ததோ என்று அஞ்சும்படி அவர் கண்கள் சிவந்து, அதிர நகைத்தார்; என்று சொல்கிறார் கம்பநாடர்.

இதிலே துளஸிதாஸருக்குச் சிறிது வேறுபாடுண்டு. அவரும் 'நகைத்தார் முனிவர்' என்றுதான் சொல்கிறார்: ஆனால் வெகுண்டு அல்ல; தசரதன் அன்பைக் கண்டு.

> சுநி ந்ருப கிரா ப்ரேம ரஸ சானி
> ஹ்ருதய ஹர்ஷ மானா முனி ஞானி!

அரசன் இயம்பிய அன்பில் கரைந்த சொற்களைக் கேட்டு, ஞானியான முனிவர் இதயத்துள் உவகை கொண்டார்.

பிறகு வசிஷ்டர் எடுத்துச் சொல்லி, தசரதனை, முனிவருடன் இராமபிரானையும் இளவலையும் அனுப்பச் சம்மதிக்கச் செய்கிறார்.

அந்த சமயத்தில் தசரதன் இருகுமாரர்களையும் அழைத்துவரச் செய்து,

> வந்த நம்பியைத் தம்பி தன்னொடு
> முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநல்
> தந்தை நீதனித் தாயு நீயிவர்க்
> கெந்தை தந்தன னியைந்த செய்கென்றான்.

இந்த இடத்தில் துளஸிதாஸரும்,

> தும முனி பிதா ஆன் நஹிம் கோஊ

என்று தசரதன் சொன்னதாகச் சொல்கிறார்.

ஏ முனி சிரேஷ்டரே! நீர்தான் இவர்களுக்குத் தந்தை: உம்மு டன் வரும் இவர்களுக்கு வேறு ஒருவரும் இல்லை; என்று கருத்து உள்ளதாதலால் அந்த வாக்கியத்துக்கு நீரே தந்தை தாய் எல்லாம் என்று பொருளாகும்.

உயிர் சென்றதும் மீண்டதும்

அவர்களை அழைத்துக்கொண்டு விசுவாமித்திரர் ஏகும்போது,

அன்ன தம்பியும் தானும் ஐயனும்
மன்னன் இன்னுயிர் வழிக்கொண் டாலெனச்
சொன்ன மாதவற் றொடர்ந்த சாயைபோல்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினர்

என்று கம்பர், அவர்கள் இருவரும் அரசன்உயிர் எனவும் அதை எடுத்துக்கொண்டு போகிறார் விசுவாமித்திர முனிவர் எனவும் கூறு கின்றார். அது மட்டுமல்ல,

காவியு மொளிர்திரு கமலமு மெனவே
ஓவிய வெழிலுடை யொருவனை யலதோர்
ஆவியு முடலமு மிலதென வருளின்
மேவினன் உலகுடை வேந்தர்தம் வேந்தன்

என்று அவர் முன்னமே சொல்லியிருக்கிறார் அல்லவா?

துளஸிதாஸரும் இதேகருத்தை இதேஇடத்தில் வேறுவிதமாக வெளியிடுகிறார்.

தசரதன் இரு குமாரரையும் அழைத்து விசுவாமித்திரரிடம் கையடையாகத் தந்தவுடன்,

மேரே ப்ராண் நாத சுத தோஊ

நாதனே! இவர் இருவரும் என் உயிர்; என்கிறார்.

உயிர் என்றால் உயிர் போன்றவர் என்பதுதான் பொருளாம். மிகவும் விரும்பும் ஒன்றை உயிரன்னது என்று சொல்வது வழக்கமே. அதில் வியப்பு ஒன்றும் இல்லை. ஆனால் இரு கவிகளும் தசரதன் உயி ரைப் பிரிந்ததாகத் தாம் சொன்னதை மறக்காமல் இருந்து, இருவரும் பிறகு சேர்ந்த உடனேயே பிரிந்தஉயிர் மீண்டும் சேர்ந்தது என்று சொல்லிவிடுகிறார்கள். அதுதான் இங்கே குறிக்கொள்ளற்பாலது.

இராமன் மிதிலைசென்று வில்லிறுத்து, சீதை கேள்வனாகத் தகுதி பெற்றவுடன் தசரதருக்குச் செய்தி அனுப்பப்படுகிறது. அவரும் படையுடனும் பரிவாரங்களுடனும் வந்துசேருகிறார்.

காவியுங் குவளையுங் கடிகொள்கா யாவுமொத்
தோவியஞ் சுவைகெடப் பொலிவதோ ருருவொடே
தேவருந் தொழுகழற் சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந்து அரசன்மா டணுகினான்.

[எதிர்கோட் படலம், 22.]

என்று குறிக்கிறார் கம்பர்.

உயிர் பிரிந்தால் எவ்வளவு வருத்தம் நேருமோ அவ்வளவு வருத்தமும், அந்த உயிரே வந்து சேராதுபோனால் எவ்வாறு நீங்கும்? ஆகவே விழிப்பாக இருந்து மீண்டும் ஆவி வந்து சேர்ந்தது என்று குறித்துத் தம் கடமையை முடித்துக்கொள்கிறார் கம்பர்.

அதேபோல் துளஸிதாஸரும்,

புனி தண்டவத காத தோஉ பாயீ
தேகி ந்ருபதி உர சுக் ந சமாயீ
சுத ஹிய லாயி துஸஹ துக மேடே
ம்ருதக சரீர ப்ராண ஜனு பேட்டே.

பிறகு இரு சகோதரர்களும் அடிபணிந்தனர். கண்ட மன்னனுக்கு ஆனந்தம் இதயம் கொள்ளவில்லை. மக்களை இதயத்துடன் தழுவித் தாங்கமுடியாத துக்கத்தை ஒழித்தான். உயிரற்ற சரீரத்தில் உயிரை ஊட்டினான்!

இரு குழந்தைகளையும் உயிர் என்றான் முதலில் மன்னன். ஆனால் கம்பர், இராமன் வந்தவுடனேயே ஆவி வந்ததாகச் சொல்லிவிட்டார். துளஸிதாஸரோ இரு குமாரர்களையும் அங்கே உயிர் என்று சொன்னதற்கேற்ப இங்கேயும் இருவரையும் சேர்த்தே உயிர் என்று சொல்லி உவமையால் ஏற்பட்ட ஒரு பொறுப்பை ஏற்று முடிக்கிறார்.

(தொடரும்)

*கிறித்து காலத்துத் தமிழ்மக்கள்

மட்டுநகர் வித்துவான், பண்டிதர் திரு. F. X. C. நடராசா அவர்கள்,
Research Assistant, Official Languages Commission, Colombo.

கிறித்து காலமென வழங்கும் முதல் நூற்றாண்டில் உலகத்தில் உரோமைச் சக்கராதிபத்தியமே மிக்க வல்லமையும் நாகரிகமும் அடைந்திருந்தது. உரோமாபுரியில் கடைச்சக்கராதிபதியாகிய திராசன் காலத்தில் அது மிக உயர்ந்த நிலையை எய்தி, ஐரோப்பாவின் பெரும்பாகத்தையும், மத்தியதரைக் கடலைச் சூழ்ந்துள்ள ஆசிய ஆபிரிக்கக்கரையோர நாடுகளையும் தன் ஒரு குடை நிழலில் அணைத்து வைத்திருந்தது. கிழைத் தேசத்திலே விசாலித்திருந்த மிகப்பெரிய சீனச்சக்கராதிபத்தியம் பெரும்புகழ்படைத்த கான் அரசபரம்பரையில் வந்த அரசர்களின் காலத்தில் வெகு வாய்ப் பரந்து, பசுபிக்குச் சமுத்திரக்கரை முதல் கசுப்பியன் கடலீறாய்க் கிழக்கு மேற்காயும், அற்லசு மலை முதல் இமயமலை வரை வடக்குத் தெற்காயும் விசாலித்துப் பரந்திருந்தது. இந்த இரு சக்கராதிபத்தியங்களுக்குமிடையே பார்தியா காந்தாரம் என்னும் இரு இராச்சியங்கள் இருந்தன. பார்திய அரசன் பாகோறசு என்பான் தன் ஆணையை மீதியா, பாரசிகம், ருசியா, பாபிலோனியா என்னும் பிரதேசங்களிற் செலுத்தியந்தான். சாகசுசாதியாரின் தலைவனான கனிடகன் ஆசியாவின் மத்தியகிரி சமபூமியிலிருந்து வெளியேறி, புத்திரியா சக்கராதிபத்தியத்தைப் புரட்டியெறிந்து காந்தாரத்தின் சிம்மாசனபதியானான். இவனுடைய இராச்சியம் பத்திரியா முதல் இமாசலத்தின் நடுவரைக்கும் ஒக்சசுநதிக்கும் யமுனாநதி மீறாகவும் பரவியிருந்தது. காந்தாரத்தின் கீழ்பாலும் இமாசலத்தின் தென்பாலும் விசாலித்திருந்த பழைமைமிக்க மகத தேசத்தை ஆந்திரர் வகுப்பாரில் உதித்த மகாகர்னன் ஆண்டுவந்தான். விந்தியமலையின்

---

*திரு. கனகசபைப் பிள்ளையவர்களின் "1800 ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழ் மக்கள்" என்ற ஆங்கில நூலின் முதல் அதிகாரத்தை மொழிபெயர்த்து எழுதப்பட்ட கட்டுரை இது.

வடபாலுள்ளதும், ஆந்திரர் வகுப்பினரை ஒத்த வேறோர் வகுப்பின ரால் தாபிக்கப்பெற்ற சிற்றரசுமாகிய மாளவதேசம் மகததேசத்தா ரின் ஆணையினின்றும் தன்னை விலக்கிக்கொண்டது. ஒற்றுமையும் வலிமையும் வாய்ந்த பார்த்தியர் இந்துநதி கழிமுகத்திலும் குசராத் திலும் ஆணையாதிக்கம் செலுத்தினர். தக்கணதேசத்திலோ மகா நதி, கோதாவரி, கிருட்டிணாநதிப் படுகைப் பிரதேசங்கள் மகத சக்கராதிபத்தியத்தின் ஆணைப்பரிபாலனத்தி லிருந்தன. இதன் தெற்கெல்லையில் தமிழகம் விளங்கியது. தமிழகமே இந்தியகுடா நாட்டின் தென் அந்தத்திலிருந்தது. இந்தியாஎங்கணும் புத்தசமயம் தலையெடுத்து நின்றது. அநாரிய சாதி மக்களின் ஆதிக்கமே பெரும் பாலும் ஓங்கிநின்றது. ஆரியர் பாடோ அதோகதி; பெரிய விழுக் காடு. பிராமணத்தின் பாடோ பெருந்திண்டாட்டம், உயிர்பிழைத் தலோ அசாத்தியம். மேல்வந்த ஆண்டுகளில் அரசபீடங்கள் பிரா மணத்திற் பற்றுக்காட்டியபோது, இதர சமயம், அந்நியர் ஆட்சி என்பவற்றின் அடிச்சுவடு முதலாய்த் தேசத்தில் இல்லாது களை யத் தன்னாலாய முழுப்பிரயத்தனமுஞ் செய்தது. இதனாற்றான் போலும் கி. பி. முதல்நூற்றாண்டில் சங்கத இலக்கியங்கள் தோன்ற வழியின்றி மங்கிமழுங்கியது. ஆனால் அதேகாலத்துத் தமிழ்இலக் கியங்களின் பெரும்பகுதி சிதைவுறாது நம்மை வந்தண்டியது பெரு வியப்பன்றோ? இவை தமிழரின் வாழ்க்கையை மாத்திரம் வெளிப் படுத்துவனவல்ல. பழைமை மிக்க காலத்து இந்தியாவிலிருந்த மற் றும் நானா சாதிகளின் வரலாறுகளைத் தெரிவிக்கின்றன. பூர்விக தமிழ் இலக்கியத்தின் விரிந்தபரப்பு, பிரயாணிபெவரும் கால்மிதி யாதநிலப்பரப்பை ஒத்திருந்தது. பூர்வ தமிழ்இலக்கியங்களிற் பல இப்போதுதான் சூரியன் முகத்தைக் கண்டன. இதுவரை அவை காலிகிதத்தில், பனையோலைச் சட்டங்களில், வகைமோசமாகத் தாம் அகப்பட்ட பண்டிதர் சிலர் வசத்தில், கரந்திருந்து தவஒழுக்கம் மேற்கொண்டிருந்தன. பிராசீன மொழிவழக்கில் அவை தொகுக் கப்பெற்ற தன்மையினாலும், இதரசமயச்சார்புடையனவாக இருந்த தன்மையினாலும் தமிழ்கற்போரின நன்மதிப்பைப் பெறமுடிய வில்லை. உள்ளபடி அவற்றிற் சில பாடசாலைகளில் விலக்கப்பட்டிருந் தன. தங்கள் மாணாக்கருக்கு அவற்றைக் கற்றுக்கொடுப்பது பிரா யச்சித்தத்தால் ஈடுபண்ண முடியாத பாவ துரோகமெனச் சைவ வைணவ பண்டிதர்கள் அபிப்பிராயப்பட்டிருந்தனர். காலிகித

ஓலைச் சுவடிகளிற் பல சைவ ஆதீனங்களிலும் சமணப்பள்ளிகளிலும் தேடுவார் நாடுவாரற்று அலட்சியமாய்க் கிடந்தன. பாண்டித்தியம் நிறைந்த அறிஞர் சிலர் வெகு பிரயாசையோடு திறந்து தருவித் தேடிப்பிடித்து மிகு சிரமத்தோடு ஆராய்ந்தும் ஒப்புநோக்கியும் மறைந்துபோகாது காப்பாற்றி வைத்திராவிட்டால், சீர்சிதைந்து வழக்கழிந்தொழிந்து தூசிமயமாகிவிடும். இவ்வரும்பணியில் நமது போற்றுதலுக்கு முதலிடம் வகிப்பவர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களே யாவர். சேனாவரையர், நச்சினார்க்கினியர் உரைகளோடு தொல்காப்பியம் முப்பகுதியினையும் நல்லந்துவனார் கலித்தொகையையும் இவர் பதிப்பித்துள்ளார். கும்பகோணம் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் சாமிநாதையர் அவர்கள், பத்துப்பாட்டு சிலப்பதிகாரம் புறநானூறு இவற்றைப் பதிப்பித்துள்ளார். திரு. சண்முகம்பிள்ளை மணிமேகலையைத் தைரியமாக உரையின்றிப் பதிப்பித்தார். நன் மதிப்பிற்குரிய பல நூல்கள் இன்னுமே தனிப்பட்ட நபரிடம் கா விகிதத்திலுண்டு.

கி. பி. ஒன்பதாம் சதாத்தத்தின்முன் தமிழ்இலக்கியம் தோன்றவில்லை யென்பது மேலைத்தேச வித்துவான்களின் பொதுவான அபிப்பிராயம். இதில் உண்மையுண்டு. உள்ளபடிக்குத் தமிழ்மக்கள் படைத்தனவும் தமிழ்இலக்கியத்தில் அதி உசிதமானவையும் ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை பிற்பட்ட இலக்கியங்கள் பொதுவாகச் சங்கத இலக்கியங்களின் சாயலாகவோ, அன்றேல் மொழிபெயர்ப்பாகவோ தோற்றமளிக்கின்றன. பூர்வ தமிழ் இலக்கியங்களை அதி நுணுக்கமாகப் படித்துப் பயின்ற அளவில், அவற்றிற் சில, சந்தேகமின்றி இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை யென்பது எனது நல்லபிப்பிராயம். ஆரபியர், கிரேக்கர், உரோமர், யாவனியராம் இதரசாதி மக்களோடு நிகழ்த்திய பண்டமாற்றின்பேறாகத் தமிழ்மக்கள் ஐசுவரியத்திலும், நாகரிகத்திலும், கடந்திருந்தனர். பொருள் வருவாய் கதித்ததன் காரணமே இலக்கியச் சிந்தனையிலும் ஈடுபடத் தூண்டுகோலாயிற்று தமிழ் இலக்கியத்தின் உன்னதநிலை கி. பி. முதல் நூற்றாண்டென்றே அறுதி உறுதியாகக் கூறுதல் சாலும். புலவர்களின் கடைச்சங்கம் மதுராபுரியிலே உக்கிரபாண்டியனும் தமிழ்அரசன்

ஆத்தானமண்டபத்தில் நடைபெற்றது. அக்காலத்திருந்த ஐம்பதின்மருக்குக் குறையாத புலவர்களின் பாடல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இப்புலவர்கள் சாதியாலும் சமயத்தாலும் வெவ்வேறு வகையினர்; தமிழ் நாட்டில் பற்பல கிராமங்களிலிருந்தும் வந்தவர். சமயத்தார் சிலர் நிகண்டவாதிகள்; வேறு சிலர் புத்தர்; மற்றுஞ்சிலர் பிராமணமதத்தர்; தொழிலால், அரசரும் ஆசிரியரும், வணிகரும், வைத்தியரும், உழுதொழிலாளரும், சிற்ப விற்பன்னரும், எனப்பட்ட புலவர்கள் இருந்தனர். தமிழ் நாட்டின் ஆதிகால வரலாற்றை இருள் போர்த்திருக்கும் வேளையிற்றானே ஏக காலத்திருந்த இத்தனை புலவர்களின் பாடல்கள், பிரபைகாலும் நல்வரவெனச் சோபனங் கூறி நின்றன.

தமழரின் சமயம் சமூகப் பழக்கவழக்கங்கள் இவற்றைத் தெரிவிக்கும் இச் செய்யுட்கள் தாமே, கிறித்து அத்த முற்கூற்றை அடுத்து இவை இயற்றப்பெற்றனவென அநுமானித்தற்குச் சாதனமாகின்றன. ஏனெனில் இப் பாக்கள்மூலம் தமிழ்நாட்டில் பௌத்தரும் சிந்தார்கள் என்று அறிகிறோம். எனினும் அவர்களால் புத்தரின் சிலைகளோ அல்லது புத்தகுருமார் சங்கமோ தாபிதம் பண்ணப்படவில்லை யென்பது தெளிவு. நிகண்டவாதிகள் பௌத்தரை வேதபுரட்டிகளாகக் கொண்டனர். ஆனால் இந்நிகண்டவாதிகள் தங்கள் முத்தர்களாம் தீர்த்தங்கரர்களை வணங்க ஆரம்பிக்கவில்லை. சிவன், விட்டுணு, சுப்பிரமணியர், இவர்களுக்கும் தலங்களிருந்தன. இந்திரன், பலதேவன் இவர்களுக்கும் தலங்களிருந்தன. பூணூல் அணிந்த "இருபிறப்பாளர்" எனப் பாராட்டிக்கொள்ளும் பிராமணரும் இருந்தனர். அரசர்களாவது வைசியராவது இவ்வுரிமை பாராட்டினாரல்லர். கன்மதில்சூழ் நகரங்களிலும் மாபுரங்களிலும் வசித்த தமிழரும் இருந்தனர். ஆனால் நாட்டின் சில பகுதிகளில் நிலையான பதியின்றி அலைந்து உலைந்து திரிந்து ஜீவனம் செய்த மாந்தரும் உண்டு.

முன்விதந்தோதிய பாக்கள் பழைமைமிக்கவை யென நாட்ட இன்னுமோர் சான்று காட்டுதும். தமிழ் நாட்டுப் பூர்வ புலவர்களால் தங்கள் பாக்களில் சிறப்பித்துக் கூறிய பிரதான பட்டினங்கள்

துறைமுகங்கள், விலைபகர் பண்டங்கள் இவை யாவும் பிளினி, தொலமி இவர்களால் எழுதப்பெற்ற நூல்களிலும், பெரிப்புலுசு என்ற நூலிலும் மாற்றம் எதுவுமின்றி ஒத்த பான்மையில் எடுத்தோதப் பெற்றிருக்கின்றன. பிளினி கி. பி. 79-ல் மரணத்திரையுள் மறைந்தார். இறப்பதற்கு ஈராண்டுமுன் இவரது பௌதிக சரிதை எனும் நூல் முற்றப்பெற்றிருந்தது. பெரிப்புலுசு என்ற நூலை யாத்த பெரியாரின் நாமதேயம் தெரிந்திலது. இவரோர் எகிப்தியர். அகுத்தசு சீசர் காலத்திற்குப் பிற்பட்டது இந் நூல். ஆனல் உரோமானியரால் நபத்தேயர் முறியடிக்கப்படுவதற்கு முற்பட்டது. அவருடைய காலத்தை மிகவும் நுணுக்கமாய் வரையறுத்துக்கூற அவர் நூலே சான்று தரும். தமது காலத்தில் ஒக்கசுமித்தே சாதியாரை சொசுகாலிசு என்ற அரசன் ஆட்சிசெய்ததாகத் தமது நூலிற் கூறியிருக்கிறார். கி. பி. 78–89 ல் அபிசீனியாவை ஆளுகைசெய்த சகக்கேசு என்பவரே இவர் கூறும் சொசுகாலிசு என்பவர். எனவே பிளினி காலஞ்சென்ற சிறிதுகாலத்தின் பின்; அஃதாவது கி. பி. 80-89 என்ற ஆண்டுகளுக்கிடையில் பெரிப்புலுசு எழுதப்பட்டதாகக் கொள்ளல் தகும். சாதாரணமாக தொலமி என வழங்கும், குளோடியசு-தொலமி என்பார், கி பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் அந்தோனிபயசு அரசாளும் நாளில் புகழ்பெருக வாழ்ந்து கி. பி. 163ல் மரணத்திரையுள் மறைந்தார். நூலாசிரியர்களாகிய இவர்கள் தமிழ்ச் சாகியத்தாரையும் அவர்கள் நடாத்திய இதரதேச வாணிபத்தையும் மதிக்கரும் வகையில் விரித்துரைத்திருக்கின்றார்கள். மற்றைய ஆசிரியர்களை மிஞ்சிய பான்மையில் தொலமி என்பார் கரைநாட்டுப் பட்டினங்களையும் உள்நாட்டுப் பட்டினங்களையும் கிரமமாக வரிசைப்படுத்தியுள்ளார். இவரால் எடுத்தோதப்பெற்ற துறைமுகப் பட்டினங்களைத் தமிழ்ப்பாடல்கள் விதந்தோதும் சரித்திர சம்பந்தங்களைக் கொண்டு திட்டமாக மட்டிட்டறிந்து கொள்ளலாம். ஆனல் உள்நாட்டுப் பட்டினங்களின் நிலையத்தை அளவிட முடியவில்லை. ஏனெனில் இந்தியகுடா நாட்டின் வடிவத்தை அவர் சரிவர வரையறுத்தாரல்லர். இந்தியாவைக் காட்டும் இவருடைய படத்தின்படி, கண்டத்தின் தெற்கெல்லையாகக் கொள்ளப்படுவது தற்கால நகராகிய

பம்பாயிலிருந்து முசலிப்பட்டினத்திற்கு இழுக்கப்படும் வளைந்து நிமிர்ந்த வரையாகும். இப்படியானமையால் குடாநாடு துண்டிக்கப் படலாயிற்று. தமது சொந்தப்புத்தியாற் கற்பித்த அந்தச் சந்த மற்ற படத்தில், எகிப்திலிருந்து இந்தியாவுக்கும் இந்தியாவி லிருந்து எகிப்துக்கும் பயணஞ்செய்தவர்கள் கொடுத்த விபரத்திற் கிணங்க, மலைகள் நதிகள் பட்டினங்கள் இவற்றை அங்குமிங்கு மாய்த் திணித்துவிட்டார். சாதிகுல வரிசைகளும் அவர்கள் வாழ்ந்த பிரசித்திபெற்ற நகரங்களும் சரிவரத் தப்பில்லாமற் கூறி யிருப்பது வியக்கத்தக்கது. இவ் விவரங்களைச் சேகரிப்தற்கு அவர் மாட்டு எத்துணை அக்கறையும் சாக்கிரதையு மிருந்தன என்பதை நாம் ஒருவாறு மதிக்கலாம்.

பின்எழுந்த பலநூல்கள் கூறும் பல சரித்திரசம்பந்தான சம்ப வங்கள், மேற்கோள்கள் இவற்றிலிருந்து உக்கிரபாண்டியனும் கடைச்சங்கப் புலவர்களும் நெடுங்காலத்துக்கு முற்பட்டவர்க ளென்று அநுமானிக்கலாகும். இதனை இறையனார் அகப்பொருள் என்ற நூல்மூலம் விளக்குதும். இந்நூல் உரையினில் முசிரியாசி ரியர் நீலகண்டனார் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு பகுதியைத் தந்துள்ளார். உக்கிரபாண்டியனின் தலைமையில் சங்கப்புலவர்கள் கூடியதை ஒட்டிச் சொல்லுகிறார். உரையாசிரியர் தாம்கண்ட உரை எங்கணும் பாண்டியன்நெடுமாறன் என வழங்கும் அரிகேசரியை, நெல்வேலி வெற்றிவீரனை, புகழ்ந்துபோற்றியிருக்கின்றார். பாண்டிய னும் சிவந்தனுயிருந்தான் என்றே உரை நவில்கின்றது. இவ்வரசன் வடபாலிருந்து வந்து தன் இராச்சியத்திற் கால்வைத்த எவரையும் புறங்கண்டு பாண்டிய சேர சோழ இராச்சியங்களை ஆண்டுவந்தான் என்றுரைகின்றது. பேர்போன நெல்வேலிப்போர், பாண்டியனுக் கும் கொல்லாபுரி உதயசந்திரனுக்குமிடையில் நிகழ்ந்ததாகவும், பல்வமல்லன் நந்திவர்மனின் உபயேந்திர சாசனத்தால் நாம் அறி கிறோம். பல்லவமல்லன் நந்திவர்மனின் தளபதியே உதய சந்திரன். இந்தப் பல்லவமல்லன் நந்திவர்மனே, மேல்சாளுக்கிய அரசனை இரண்டாம் விக்கிரமாதித்தனோடு ஏககாலத்தில் கி. பி 733–747ம் ஆண்டுகளில் செங்கோலோச்சினன் எனச் சாளுக்கியதேசச் சிலா

சாசனங்கள் குறிக்கின்றன. உரையாசிரியராகிய நீலகண்டர் நெல்வேலி வெற்றிவீரனாகிய நெடுஞ்செழியனைப் பாராட்டுகின்ற தன்மையினால், இந்த உரையாசிரியர் எட்டாம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் புகழ்பெற வாழ்ந்திருத்தல் வேண்டும். இவருரையின்படி இவர் காலத்திலேயே சங்கப் புலவரின் பாடல்களான அகம், நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து என்பன தொகைநூல்களாக வழங்கியிருந்தனவெனத் தெரிகின்றது. சிலப்பதிகாரத்திலிருந்தும் எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார். இருநூறுக்கு மேற்பட்ட புலவர்களால் பலசந்தர்ப்பங்களில் பாடப்பெற்ற நானூற்றொரு தனிப்பாடல்களின் கோவையே அகம் எனப்படுகின்றது. குறுந்தொகையும் இஃதொத்த பான்மையில் இருநூற்றைந்து புலவர்களின் பாடல்களின் தொகைநூலாகும். நற்றிணையும் இருநூறுக்குக் குறையாத புலவர்களின் நானூற்றொரு பாக்களைக்கொண்டது. பதிற்றுப்பத்து, பதின்மரின் பப்பத்துப் பாடல்களைக் கொண்டது. இந் நூல்களில் வந்த புலவர்களின் எண்ணிக்கையை அலகிட்ட போது 514க்கு மேலிருப்பதாகக் கண்டுள்ளோம். புலவர்களின் தொகை இத்துணைப் பெரிதாயிருத்தலின் இவர்களுள் அதிமுதியோர் நீலகண்டருக்கு ஆறு அல்லது எழு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவராதல் வேண்டும். சராசரி போட்டு அலகிட்டால் நூற்றாண்டுக் கொருநூறுபுலவர் இருந்தனர் எனக் கொள்ளல் சாலும். இதுவும் ஒரு சிறுதொகை யன்று. அகம் எனும் நூலில் கரிகாற் சோழன், சேரஅரசன் ஆதன், செங்குட்டுவன், இவர்களைக் குறிக்கும் செய்யுட்களுண்டு. கடைச்சங்கப் புலவரிலொருவராகிய பரணராற் பாடப்பெற்ற பதிற்றுப்பத்திலுள்ள ஒரு பத்து, சேரன்-செங்குட்டுவனின் கீர்த்திப்பிரதாபத்தைப் பாராட்டுகின்றது. இதனால், சந்தேகமறவே சேரன்செங்குட்டுவன் எட்டாம் நூற்றாண்டின் நெடுங்காலம் முன்னதாகவே வாழ்ந்திருந்தான் என்பது தெளிவாகின்றது.

சோழன் கரிகாற்பெருவளத்தான், அவன் மணமருகன் சேரலாதன், இவன் மகன் சேரன்-செங்குட்டுவன், இமயவரம்பன், இவர்கள் செங்கோலோச்சிய காலத்து இயற்றப்பெற்ற பாக்களிற்

செறிந்துகிடக்கும் சரித்திரபூர்வமான மக்களின் வரலாறு கடைச் சங்ககாலப் புலவர்கள் வாழ்ந்த காலத்தை வரையறுக்கத்தக்க திட்டமான உண்மைகளை மேலுக்தருகின்றன. ஈண்டு எடுத்துக் கூறிய சேரன் செங்குட்டுவனுக்கு இளங்கோவடிகள் என நாமம் பூண்ட தம்பி ஒருவரிருந்தார்; நிகண்டவாத சமயத்துறவி; சிலப்பதி காரம் என்னும் பெரியநூலை யாத்தவர் இவரே. இவர் நூலிற் கண்ட படி, இவர் சகோதரன் இமயவரம்பன், சேரர்தலைநகரில் நடாத்திய விழாவொன்றில் இலங்கையை யாண்ட கயவாகு, மாளுவவேந்தன் ஒருவனுடன் கலந்துகொண்டான் என அறிகிறோம். இலங்கையை யாண்ட அரசனின் பெயர்கொண்டு, இமயவரம்பன் காலத்தைத் தெளிதல் கூடும். சிங்களமன்னர் பரம்பரையைக் காட்டும் நீளமான அரசவரிசையில் கயபாகு என்னும் பெயர் இருமுறை வந்துள்ளது. முதலாம் கயபாகு கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலும் இரண்டாம் கயபாகு கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலும் இலங்கையை ஆண்டனர் எனக் கூறப்படுகின்றது. சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட கயபாகு இரண்டாம் கயபாகு என்றால், இவனோடு ஏககாலத்தவனாகிய இமயவரம்பனின் போனாகிய கரிகாற்சோழன் கி. பி. பதினோராம் அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்திருக்க வேண்டும். ஆனால் பல தமிழ்ப்பாடல்களிலும் பத்தாம் பதினோராம் நூற்றாண்டுகளில் அரசுசெய்த சோழர்களின் உபயங்களைக் குறிக்கும் செப்புத்தகட்டாலான சாசனங்களிலும் முதலாம் கரிகாற்சோழன், காலத்தால் எவ்வளவோமுற்பட்டவனென்றும் சோழபரம்பரையில் ஆதியிலிருந்தவனென்றும் கூறப்பட்டிருக்கின்றது. இதுகொண்டு சிலப்பதிகாரம் எடுத்தாண்ட கயபாகு இரண்டாம்கயபாகு அல்லன் என்றும், கி. பி. 113-125 ஆண்டுகளில் ஆண்ட முதலாம் கயபாகு என்றும் தெளிதல் வேண்டும்.

சேரன்-செங்குட்டுவன் கங்கைக் கரையோரமுள்ள மகததேச மன்னனைச் சென்றடைந்து அந்நியோன்னியமாக அளவளாவின னெனச் சிலப்பதிகாரம் அறிவிக்கின்றது. அம்மன்னனின் பெயர் நூற்றுவர்-கன்னர்; சதகன்னர் என்னும் இப்பெயராக்கம் எனக் கோர் பெருமயக்கமாக விருந்தது. சதகர்னன் என்ற சங்கதமொழியின் நேர் மொழிமாற்றமே இஃதென்று பின் தெளியலாயிற்று.

கர்ண என்று ஆந்திரவம்ச அரசர் பலர் இதேநாமமுடையவர் என்பதும் அறியலாயிற்று. இவர்கள் பெயர் தீட்டப்பெற்ற நாணயங்களும் சிலாசாசனங்களும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் சதகனி எனப் பாலிமொழியிற் பொறிக்கப்பட்டிருந்தது. சங்கதமொழி வல்லார் சாதகரணின் எனப்பிழைபட உச்சரித்தனர். சதகர்ணின் என்பதே சரியான உச்சரிப்பு. தமிழில் அது நூறுகர்ணர் ஆயிற்று. ஏககாலத்தில் எழுதப்பெற்ற நூல்களில் சதகர்ணின் என்ற சங்கதமொழியின் மாற்றமே நூறுகர்ணர் என்று வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. கர்ண (காதுகள்) என்பது ஒற்றர் ஒரு நூறுடையார் எனவும் நூறுவழியாய்க் கருமங்களை அறியும் ஆற்றலுடையோரெனவும் பொருள்படுகின்றது. வாயு, விட்டுணு, மச்ச பாகவத புராணங்கள் மகதசக்கராதிபத்தியத்தை மௌரவியர் என்போர் 137 வருடங்களும், இவர்களுக்குப்பின் சுங்கர் 112 வருடங்களும், இவரைத் தொடர்ந்து கன்வயனர் 45 வருடங்களும் அரசுபுரிந்த பின், ஆந்திரர் சந்ததியில் வந்த அரசர் முப்பதின்மர் 456 ஆண்டுகளாக ஆண்டனர் என்றும் கூறுகின்றன. ஆனால் எந்தப்புராணமும் ஆந்திர அரசர் பூரண நாமாவலியைத் தந்ததாயில்லை. புராணங்களில் அதிபூர்வமானதாய்க் கொளற்பாலதான மற்சபுராண அட்டவணையில் 29 அரசர்களின் நாமங்களும் அவாவர் ஆளுகைக் காலங்களும் கொடுக்கப்பெற்றுள. மகததேச சக்கரவர்த்திகளின் ஆரம்ப வரலாற்றுக் காலவரையறையில் நம்பத்தகுந்த பகுதி சந்திரகுப்தனின் காலமாகும். இவனும் செலூக்கசு நிகேதரும் ஏககாலத்தில் அரசுபுரிந்தவர்கள். நிகேதர் கி. மு. 310 சிம்மாசனபதியாகி கி. மு. 305-ல் சந்திரகுப்தனோடு ஒரு உடன்படிக்கைச் சாதனமுஞ் செய்தான். சந்திரகுப்தன் கி. மு. 312 அளவில் முடிசூடியிருத்தல் வேண்டும்; அஃதாவது நிகேதர் முடிசூடுவதற்கு இரு ஆண்டுகளின் முன் என்பர். சந்திரகுப்தன் சிம்மாசனமேறிய ஆண்டிலிருந்து அலகிட்டால், முதலாம் சதகர்ணன் ஆட்சி கி. பி. 77 முதல் கி. பி. 133 வரை நீடித்ததாகும். மச்சபுராணப்படி:—

பத்துமௌரவியர்	137 வருடம்	கி. மு.	312—175
பத்து சுங்கர்	112	,,	175— 63
நாலு கன்வயனர்	45	,,	63— 18

ஆந்திரர் முப்பதின்மரில் முதல் அறுவரின் ஆட்சிக்காலம்:

சிசுகன்	23 வருடம்	கி. மு.	18—கி.பி.	5
கிருட்டினன்	18	கி. பி.	5—	23
சிமாலக்கர்ணன்	18	,,	23 –	41
பூரணசுங்கன்	18	,,	41—	59
சிறீவசுவாமி	18	,,	59—	77
சதகர்ணன்	56	,,	77—	133

சதகர்ணனின் ஆட்சிக்காலம் இலங்கை மன்னனான கயபாகுவின் கால முழுவதையும் ஒட்டிநிற்கின்றது. கயபாகு கி. பி. 113–125 வரை 12 வருடங்களுக்கு ஆண்டான் என்று மகாவம்சம் கூறுகின்றது. சிலப்பதிகாரம் எடுத்தாளும் மகதநாட்டின் சக்கரவர்த்தியாகிய சதகர்ணனும் செங்குட்டுவ-சோழனும் கயபாகுவும் ஏககாலத்தில் அரசுபுரிந்தவர். எனவே கி. பி. 77 - 133 இவற்றிற்கிடைப்பட்ட காலத்தில் அரசுபுரிந்தவனாக மச்சபுராணத்திற் கூறப்படும் சதகர்ணன் முதலாம் சதகர்ணன் என்பதற்குத்தடையில்லை. சந்திரகுப்தன்முதல் முதலாம்சதகர்ணன் வரையுமுள்ள வரலாறுகளின் காலப்பொருத்தம் பரிபூர்த்தியானதெனலாம். கர்ணபரம்பரையாய் நம்மையடைந்த சம்பவங்களைப் பாதுகாத்துத்தந்த புராணவரலாறுகளும் மகாவம்சக் கூற்றுக்களும் ஒத்து இணைந்து செல்கின்றன வென்பது தேற்றம்.

மகாவம்சம் கி. பி. ஐந்தாம் நூற்றூண்டில் இயற்றப்பெற்றது. தீபவம்சம் இதிலும் முந்தியது. இந்த இருஇதிகாசநூல்களும் முதலாம்கயபாகுவை எடுத்தாளுகின்றன. வங்கநாசிகன் எனப் பட்டப் பெயர் வழங்கும் திசன் எனும் அரசன், கயபாகுவின் தந்தை, அரசுசெலுத்திய காலத்தில் சோழனொருவன் படையெடுத்துவந்து பல்லாயிரவரைச் சிறைப்படுத்திச் சென்றதாகச் செய்தியுண்டு. கயபாகு கி. பி. 113 முடிதரித்ததும் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற மனக்கடுப்பு மிஞ்ச சோழபுரத்துக்கு எதிராகப் படை

வெடுத்துச் சென்றுன். பாரம்பரிய கதைப்பிரகாரம் காவேரிநதிப் பாங்கரில் கட்டியெழுப்பிய அணையில் வேலைசெய்வதற்காகவே இலங்கையர் சிறைபிடிக்கப்பட்டனராம். பிற்காலத்தெழுந்த செய்யுள்களாலும் சிலாசாசனங்களாலும் இக்கதை உறுதிப்படுகின்றது. காவேரிநதிப்படுகையின் இருமருங்கும் பாரிய அணை கோலியவன் கரிகாற்சோழன். கழிமுகத்திலிருந்து 100 மைல் தூரத்திற்கு இருமருங்கினும் உயர்ந்த அணைகட்டுவது பெரியகாரியம். அனைப் பருங்காரியமாகிய அணைக்கட்டு ஒரு அரசனின் சிறியகாலத்தில் முற்றுப்பெறமுடியாதென்பது திண்ணம். ஆகவே கரிகாலன் காலத்தில் இது முற்றுப்பெற்றிருக்காது. நதிக்கரையில் தொண்டாற்றவேண்டும்பேரைச் சிறைப்பிடிக்க எத்தனித்தவன் கரிகாலன்; அன்றேல் அவனை உடன்தொடர்ந்த மன்னனுதல் வேண்டும்.

இப் பாரம்பரியம், கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் முற்கூற்றில் சேரன்செங்குட்டுவனும் முதலாம் கயபாகுவும் ஏககாலத்திருந்தாரென்டதை வலியுறுத்துகின்றது. எனவே சேரன்செங்குட்டுவனின் தாயின் பிதாவாகிய கரிகாலன் கி. பி. முதலாம் நூற்றுண்டின் கடைக்கூற்றில், அஃதாவது 1800 வருடங்களுக்கு முன் இருந்தவனுகக் கொள்ளுதல் சாலும். தமிழ் இலக்கியத்தின் காலத்தை வரையறுத்துக் கூறியவிடத்துத் தெரிவித்ததுபோல், மதுரையிற் கூடிய கடைச்சங்கப் புலவரிற் பலர் சேரலாதனையும் செங்குட்டுவனையும் எடுத்துக் கூறுவதனுல் இவர்களிருவரும் ஏககாலத்தவரெனக் கொள்ளுதல் வேண்டும்.

மேல்வரும் அதிகாரங்களில் முதலாவதாய்த் தமிழ்நாட்டின் பூர்வ பூமிசாஸ்திரத்தையும், பின்னர் தமிழரின் இதரதேச வாணிபத்தையும், தமிழ்மொழி வழங்கும் வெவ்வேறு சாதியினரையும், அவர்களுடைய அரசியல் வரலாறுகளையும் எடுத்தாண்டு, ஈற்றில் சுருக்கமாக அவர்கள் சமூகசீவியம், போர்புரிவகை, இலக்கியம், ஞானதத்துவம், சமயம் என்பனபோன்றவற்றையும் எடுத்துரைப்பேன்.

தமிழ்ச் சௌந்தரியலகரி ஆராய்ச்சி

திரு. பண்டித-இராமசுப்பிரமணிய நாவலரவர்கள்,
செந்தமிழ் நிலையம், தக்கலை.

முதனூல்

சௌந்தரியலகரியாவது வடமொழியில் பராசத்தியின் சிறப்பை நூறுபாடலாற் கூறும் ஒரு நூல். இதன்கண் தேவியின் மேன்மை, அவளருளின்பெருக்கு, அவளது பரமானந்த முத்திநிலை, ஐந்தொழில்களுக்கும் அவள் இன்றியமையாநிலையில் நிற்குந்தன்மை, ஆறுதாரநிலை, ஸ்ரீசக்கரச்சிறப்பு, ஆறுதாரங்களிலும் ஸ்ரீசக்கரத்திலும் அவள் நின்று அருளுந்தன்மை, சிவனும் சத்தியும் நாதவிந்து மயமாய் நிற்கும் முறைமை, அம்முறைமைக்கு இணங்கச் சகசிராரத்திலும் ஸ்ரீசக்கர பிந்துவிலும் தேவியைக்கண்டு வழிபடும் இயல்பு முதலிய இரகசியப் பொருள்களைக்கூறும் நாற்பத்தொரு பாடல்களை 'ஆனந்தலகரி' என்றும், தேவியின் உறுப்புக்களைக் கேசாதிபாதாந்தமாகப் பல அணிகளாலும் வருணித்துக் கூறும் ஐம்பத்தொன்பது பாடல்களைச் 'சௌந்தரியலகரி' என்றும் கூறுவர். ஆனந்தம்-மகிழ்ச்சி, இன்பம்; சௌந்தரியம்-வடிவழகு; இலகரி-மிகுதி, பெருக்கு.

இப்பாடல் நூறும் கலைமகள் செய்து சிவபெருமானுக்குக் கூற, அவர் நகைத்துக் கைலையில் அப்பாடல்கள் முன்னரே எழுதப்பட்டிருந்தனவற்றைக் காட்டினர் எனவும், கைலையில் அப்பாடல்களை எழுதியவர் விநாயகராம் எனவும் கூறுவர். கைலையில் எழுதப்பட்டிருந்த அப்பாடல்களைப் புட்பதந்தன் என்னும் முனிவர் மேருகிரியிற் பொறித்தார் என்றும், அவற்றைக் கௌடபாதமுனிவர் கண்டு, உள்ளத்துணர்ந்து உலகவுபகாரமாகுமாறு சங்கரபகவற்பாதாசாரியர்க்குக் கூறினர் என்றும், சங்கராசாரியர் அவற்றை வெளிப்படுத்தினர் என்றும் தமிழ்ச் சௌந்தரியலகரிப் பாயிரங் கூறுநிற்கும்.

இவ்வாற்றால் சௌந்தரியலகரி தெய்விகப்பாடல்களால் ஆகிய நூலாமென்றும், அதனைச் சங்கரர் வெளிப்படுத்தியதேயன்றி இயற்றிலர் என்றும் ஒருசாரார் கருதுகின்றனர் என்பது அறியப்படும்.

தேவியினுடைய பிரபாவங்களை விரித்துரைக்கும் சௌந்தரியலகரிச் சிறப்பை,

வடமொழி யெனும்பழைய விரிகடல் பிறந்திறைவர்
மனையிடை யிருந்த சிலையே
விடமொடு தவழ்ந்துதன திடுபெயர் சவுந்தரிய
லகரியென நின்று வளர்மா
தடலாசு முன்பினுள பலமத ப்ரபந்தமெனு
மடுபகை துரந்தென் மணிநா
நடமிடு பெருங்கவிதை மதகரியொ டும்புவியை
நகரிவலம் வந்த திதுவே

என்னும் தமிழ்ச் சௌந்தரியலகரிப் பாயிரச் செய்யுளால் அறியலாகும்.

திராவிடசிசு என்ற பெயரையுடைய சிறுவன் ஒருவன் ஒருநாட் கைலையங்கிரிக்குகையிற் கிடந்து அழுதுகொண்டிருப்ப, அதனைத்தேவி கேட்டுப் பொறுதவளாய்ச் சென்று அவனை யெடுத்தணைத்துப் பால் கொடுப்ப அவன் சிறந்த கவிஞனாயினன்; என ஒரு கதை வழங்கும். பின்னர் அக்கவிஞன் (திராவிடசிசு) தேவியின்மேல் நூறு தோத்திரப் பாடல்கள் இயற்றி அவட்கு ஓதியபின்பு, அவற்றைக் கயிலாயச்சுவரில் எழுதிவைத்தான் என்றும், ஒருநாள் சங்கராசாரியர் கைலைக்கு எழுந்தருள அதனை யறிந்த தேவி, திராவிடசிசுவை அழைத்து "சங்கரன் வருகின்றான், இப் பாடல்களை அவன் அறிந்தால் இவற்றை வெளிப் படுத்தி விடுவன்; இவை மிகவும் இரகசியமானவை, அவன் இவற்றைப் பார்க்கலாகாது;" என்று கூற, அவன் தேவியின் விருப்பப்படி தான் எழுதிய பாடல்களை அழிக்கும்பொழுது ஆசாரியர் அவ்விடம் எய்தி அழிக்கப்பட்டனபோக எஞ்சிய நாற்பத்தொரு பாடல்களைப் பார்வை மாத்திரத்தாலே கற்று வெளிப்படுத்தினர் என்றும் வடமொழிப் புலவர் சிலர் கூறுகின்றனர். இவ்வரலாறு வடமொழியுரைகளினும் காணப்படு கின்றது. அந் நாற்பத்தொரு பாடல்களும் ஆனந்த லகரி என்று வழங்கும் எனவும், ஏனைய ஐம்பத்தொன்றும் சங்கரர் இயற்றியவை என்றும் கூறுவர்.

திராவிட சிசுவைப்பற்றிச் சௌந்தரியலகரி 75-வது பாடல் சிறப் பித்துக் கூறுகின்றது.

ஆனந்தலகரியில் வருங் கருத்துக்கள் வாமகேசுவர தந்திரம் முதலிய சைவதந்திரங்களிலும் உபநிடதங்களிலும் காணப்படுவனவேயன்றி இரகசியம் ஆவனவல்ல. அவை அக்காலத்து இரகசியமாக இருந்திருப்பினும், சர்வஞ்ஞபீடமேறிய சகலகலாவல்லவரும் சிவ அம்சாவதார மூர்த்தியுமாகிய சங்கரர் அவற்றை யறிந்திலர் என்று கூறுவதுபோல், அவர்க்கு இழிவுதருவது பிறிதொன்றும் இல்லை. அன்றியும், சங்கரர் சைவ வைணவ மத விக்கிரக வழிபாடுகளையுந் தேவி வழிபாடுகளையுஞ் சிறப்பித்துக் கூறி, அவற்றை அத்துவைத மார்க்கத்திற்கு அடிப்படைகளாகக் கொள்வர். அவர் ஸ்ரீவித்தியாசித்தி யுடையவர் என்பதையும் பலர் ஒப்புக்கொள்வர். அன்றியும், அருளே வடிவாகிய தேவி வேத இரகசியங்களை மறைத்துவைக்கவேண்டும் என்று சொன்னாள் என்பது போலும் பொருந்தாக் கூற்று வேறு இல்லை. ஆயினும், மேற்கூறிய வரலாறுகள் இரண்டினும் சங்கரரைப் புணர்த்திருப்பது அவர்க்கு அப் பாடல்களோடு உள்ள தொடர்பை நன்கு உணர்த்தும். மைசூரில் வெளியான சௌந்தரியலகரிப் பதிப்பு ஒன்றில் அதன் ஆசிரியர் சங்கரர் என்றே முடிபு கூறப்பட்டிருக்கின்றது.

ஆனந்தலகரிப் பாடல்களின் போக்குஞ் சுவையும் சௌந்தரியலகரிப் பாடல்களின் போக்கையுஞ் சுவையையும் விட மிக வேறுபட்டுள்ளன. சொற்பொருள் நடைகளால் ஆனந்தலகரி மிகச் சிறந்து காட்டுகிறது. 'சிவசக்த்யாயுக்த' எனும் முதற்பாட்டில் தேவியின் இன்றியமையாமையைக் கூறி 'தவாதாரமூலே' என்னும் இறுதிப்பாட்டில் சிவசக்திகளின் ஐக்கியத்தையும் அதன் வழி அத்துவிதீய மூர்த்தியையுங் கூறுதலால், ஆனந்தலகரி ஒரு நூலின் எஞ்சிய பகுதி என்று கருதுவது பொருத்தமன்று. தேவியின் உறுப்புக்களை அணிந்துரைக்க வந்த சௌந்தரியலகரி ஆசிரியர், அதற்குரிய ஐம்பது பாடல்களுடன் முடிக்காமல், தேவியின் பெருமையைக் குறித்து மேலும் ஒன்பது பாடல் கூறியது, ஆனந்தலகரிப் பாடல்கள் நாற்பத்தொன்றோடு நூறு பாடலாக்கும் பொருட்டாமெனத் தோற்றுகின்றது. எனவே, சௌந்தரியலகரி யாசிரியர் தாம் அந்நூலை, ஆனந்தலகரியை, முன்னிடத்து அமைத்துக் கொண்டு இயற்றியிருத்தல் வேண்டும். சொல் நடையும் பொருளும் மிகவேறுபட்டிருப்பதால் ஆனந்தலகரியின் ஆசிரியர் வேறொருவர்

என்பது புலப்படும். ஆனந்தலகரி யென்பதொரு பகுதியை முன் வைத்துக்கொண்டு சௌந்தரியலகரி என்று ஒரு நூலுக்குப் பெயர் கொடுப்பது பொருந்தாததாகையாலும், ஆனந்தலகரி யாசிரியர் வேறு என்பது பெறப்படும். எனவே முன் பிறரால் எழுதப்பட்ட ஆனந்த லகரியை முன் அமைத்துக்கொண்டு, ஏனைய ஐம்பத்தொன்பது பாடல் களும் எழுதிய ஆசிரியர் அவற்றின் தொகுதிக்குச் சௌந்தரியலகரி என்னும் பெயரை அமைத்தார் என்றும் அப்பெயரே நூன்முழுதுக் கும் வழங்கலாயிற்று என்றுங் கொள்ளலாகும்.

சௌந்தரியலகரி சங்கரர்க்கு வழக்கமான இனிமையும் எளிமை யும் அழகும் பொருண்மையும் பொருளொழுக்கும் அமைந்திருப்பத னால் அதனை அவர் இயற்றியது என்றே கொள்வாம். எனவே ஆனந்த லகரி அவரால் சிறப்பிற்றாகக் கொள்ளப்பட்டதொரு நூலாமென்பது, அவர் அதனை முற்பட அமைத்திருப்பதனால் அறியத்தக்கதே.

'தவஸ்தந்யம்' என வரும் பாடலில் ஆசாரியர் திராவிட சிசுவைத் திவ்விய கவியாகச் சொல்லியிருப்பதொன்று மட்டும், அத்திராவிட சிசு ஆனந்தலகரிக்கு ஆசிரியர் என்பதை விளக்கப் போதுவதன்று.

> தயாவத்யா தத்தம் த்ரவிடசிசு ராஸாத்ய தவயத்
> கவீநாம் ப்ரௌடாநா மஜநி கமநீய: கவயிதா.

என்னும் பாடற்பகுதியால், திராவிடசிசு தேவியின் ஞானப்பால் அருந் திய அரும் புலவன் என்பதை ஆசாரியர் ஒப்புக்கொள்கின்றனர். 'கவீ நாம் ப்ரௌடா நாம்' என்று கூறுவதனால், திராவிடசிசு கம்பீரமான கவிகளைப் பாடும் வன்மையுடைய கவிஞன் என்பதை அறியலாகும்.

(தொடரும்)

மதிப்புரை

சுடர் (ஜயமலர்):—[தில்லித் தமிழ்ச்சங்க வெளியீடு. விலை ரூ 1. ஹிக்கின்பாதம் சுதேசமித்திரன் புத்தக நிலையங்கள் எங்கும் விலைக்குக் கிடைக்கும்.]

தில்லித் தமிழ்ச் சங்கத்தார் ஆண்டுதோறும் வெளியிட்டு வரும் சுடரின் 3-வது மலரான இது, ஜய வருஷத்திற்குரியது. மொழி பெயர் தேசமாகிய வடநாட்டில் இச் சங்கம் செய்துவரும் தமிழ்ப்பணிகள் மிகச்சிறந்தன என்பது சொல்லாமலே விளங்கும். இம் முயற்சிக்கு உலகம் போற்றும் அரசியலமைச்சர் ஸ்ரீநேருஜி ஆசி கூறியுள்ளார். ஸ்ரீசுத்தானந்த பாரதி, திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. பெ. நா. அப்புஸ்வாமி, டாக்டர் K. S. கிருஷ்ணன் போன்ற நல்லறிஞர்களும் மற்றும் இந்நாள் இலக்கியக் கலைவல்லுநரென முன்னணியில் நிற்கும் புதுமை எழுத்தாளர்களும் தம் உரை ஓவியங்களால் இச் சுடரை ஒளி பெறச் செய்திருக்கின்றனர். தமிழ் நாட்டிற் பிறந்து உலகவிஞ்ஞானி யென உயர்புகழ் நிறுவிய ஸ்ரீ K. S. கிருஷ்ணன் அவர்களின் 'அணு சக்தி' என்ற கட்டுரை அணுசக்தியினும் மிக அறிவுவளர்க்கும் ஆற்ற லுடையதென்பது முதன்மையாகக் குறிப்பிடற்பாலது. இங்ஙனம் எல்லா அழகும் நிரம்பிய இச் சுடர்மலர் அச்சுக்கலையின் அச்சாணி போலத் திகழ்கின்றதென்னலாம்,

இறுதியாக ஒன்று, இங்கே குறிப்பிடாமல் விருப்பதற்கில்லை. 'நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு புல்லிதழ் பூவிற்கு முண்டு' இம் மலரும் அதற்கு விலக்கன்று. பண்டைத் தமிழ்ப் பண்பாட்டிற்கு இசையாத எழுத்துச் சொற் பொருட் குற்றங்கள் எல்லாம் இதில் மலிந்து காணப்படுகின்றன. இக்கால அறிஞரின் முற்போக்கு-சீர் திருத்தம்-மறுமலர்ச்சி என்னும் பெயரால் தகைவில்லாத தமிழார்வம் தலைக்கொண்டு எழுந்தனவாகையால், இவை அவ்வளவாகப் பாராட்டத் தக்கன அல்ல. இவை புதியன புகுதல் ஆகாவோ எனின், புல்லறி வாண்மை புகும். பழமைப் பற்றுடையவர், இத்தகைய குறை கண்டு பொறைகூர்தல் புலமை அறமாகும்.

அறமும் அறப்பேறும்:—[ஆசிரியர்: வித்துவான் திரு. த. பொ. தண்டபாணி அவர்கள் B. A., விலை ரூ 1. விலாசம்: ஷை ஆசிரியர், எண் 1. காமாட்சியம்மன் கோயில் வீதி, புதுச்சேரி.]

இதன் ஆசிரியர் மேற்கண்ட தலைப்பில் தமக்குத் தோன்றிய கருத்துக்களைக் கோவைப்பட மிக நீண்டதொரு வியாசமாக 40 பக்கம் எழுதியுள்ளார்கள். திருக்குறள் மேற்கோள் மிகுதியாகப் பயின்றுவரும் இதில் பிழைகள் மலிந்திருப்பது பெருங்குறை.

கல்வியின் அடிப்படைத் தத்துவங்கள்:—[ஆசிரியர்: திரு. O. S. பீரான் சாஹிப் அவர்கள் விலை அணா 4. விலாசம்: ஷை ஆசிரியர், Killai, (via) Porto-Novo.]

தெளிவான நடையில், சம்பாஷணை வடிவில், கல்வியைக்குறித்த உண்மையான முடிபும் உயர்வான கருத்தும் அடங்கியிருப்பதால், இதிலுள்ள சில இலக்கணப்பிழைகள் பொருட்படுத்தத்தக்கன அல்ல. இளைஞர்களுக்கு மிகவும் பயன்படுவது இப்புத்தகம்.

தேசிகரந்தாதிமாலை:— [பதிப்பாசிரியர்: திரு. ப. செ. திருமலை அய்யங்காரவர்கள். விலை: இல்லை. விலாசம்: ஆநந்த பிருந்தாவநம். ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத்தெரு, அம்பத்தூர்]

இது திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் 42-வது வெளியீடு. ஸ்ரீ வேதாந்ததேசிகர் என்ற ஸ்ரீ வைஷ்ணவ பரமாசாரியர் தோத்திரமாக, மன்னப்பங்கார் என்பவர் இயற்றிய நூறு வெண்பாக்களுடையது.

திருமலைமாலை:—[பதிப்பாசிரியர் ஷை ஷை. விலையும் விலாசமும், ஷை ஷை] எதிராஜதாஸர் என்னும் வைணவப்புலவரால், 'சேடகிரியந்தாதி' என்னும் பெயருடன், திருவேங்கடமால் தோத்திரமாக இயற்றப்பெற்ற இனிய பிரபந்தம் இது.

இவ் வெளியீடுகளுக்குப் பொருளுதவிபுரிந்த புண்ணியசீலர்களின் புகழ் வாழ்வதாக.

உ

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் விஜய-௵ பங்குனி-மீ 23, 24, 25, 26 (1954-ம்௵ ஏப்ரல்-மீ 5, 6, 7, 8) ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறிய மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

பண்டிதபரீக்ஷை.

தொடர் எண்.	பரீ. எண்.	
		1-வது வகுப்பு.
1	11	R. முத்தையன், 10, சாமியாசாரி சந்து, தெற்கு வாசல், மதுரை. (முதற்பரிசு ரூ 100)
2	1	நா. பார்த்தசாரதி, 15, வெங்கிடசாமி நாயுடு அக்ரஹாரம், மதுரை. (இரண்டாவது பரிசு ரூ. 70)
		2-வது வகுப்பு.
3	7	K. சுந்தரமூர்த்தி, ஆசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள், தஞ்சை ஜில்லா,
4	5	ஆ. குப்புசாமி, சிலையகம், 125, செங்குந்தர்தெரு, புதுச்சேரி.

பாலபண்டிதபரீக்ஷை.

தொடர் எண்.	பரீ. எண்.	
		1-வது வகுப்பு
1	31	ச. சாம்பசிவன், நிர். 209, நாயக்கர் புதுத்தெரு, மதுரை. (முதற் பரிசு ரூ. 70.)
2	33	அ. இ. செல்வகணபதி, ஆசிரியர், நகரவைத்தொடக்கப்பள்ளி, வடக்குமாசி வீதி, மதுரை. (இரண்டாவது பரிசு ரூ. 50)
		2-வது வகுப்பு.
3	32	ஆ. ஷண்முகவேலு, 11, சங்கீத விநாயகர் தெரு, மதுரை.
4	28	ரெங்கநாதன், ஆசிரியர், வருச்சக்குடி, காரைக்கால் வழி, தஞ்சை ஜில்லா.

5 26 நா. ஸ்ரீநிவாசன், மதுரைத் தமிழ்ச்சங்கக் சலாசாலை, மதுரை.

6 30 பொ. நடராசன், மலைமந்திரிப்பாளையம், அய்யம்பாளையம் P.O. பல்லடம் வழி, கோயம்புத்தூர் ஜில்லா.

7 25 P. நாகலிங்கம், தமிழ்ச் சங்கக் கலாசாலை, மதுரை

8 27 நா. தேசிகன் ,, ,, ,,

9 37 ச. வைத்தியலிங்கம், Clerk, General Manager's Office, C. G. R. Colombo, 10. Ceylon.

பிரவேசபரீக்ஷை.

2-வது வகுப்பு.

1 40 S. இராசகோபாலன், தமிழ்ச்சக்கக் கலாசாலை, மதுரை.

மதுரைத்தமிழ்ச்சங்கம், 10—6—'54. *R. Shanmuga Rajeswaran,* அக்கிராசனாதிபதி.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1954-ஆம் வருஷம் மார்ச்சுமீ 6உ நடத்திய

ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

[எங்கள் ரிஜிஸ்டர் நம்பரைக் குறிப்பன.]

II. இண்டர்மீடியேட் பரீக்ஷை.

1-வது வகுப்பு.

தொடர் எண்.	ரிஜிஸ்டர் நெம்.	
1	3	N. அடைக்கப்பன், Thiagarajar College, Mathurai. (முதற்பரிசு ரூபா 40)
2	6	M. பாதமுத்து, American College, Mathurai. (இரண்டாவது பரிசு ரூபா 35)
3	4	A. சின்னக்கனி, Thiagarajar College, Mathurai. (மூன்றாவது பரிசு ரூபா 30.)
4	2	S. கிருஷ்ணமூர்த்தி, Thiagarajar College, Mathurai. (நான்காவது பரிசு ரூபா 25.)

2-வது வகுப்பு.

St, Xavier's College, Palamcotta—7

Layola College, Nungambakam, Madras—718.

III. ஸ்கூல்பைனல் பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1 601 P. R. திருவேங்கடம், P. K. N. High School, Tirumangalam. (முதற்பரிசு ரூபா 30.)

2 694 R, நரசிம்மன், Board High School, Cheyyar at Tiruvettipuram. (இரண்டாவது பரிசு ரூபா 25)

3 462 M. செல்லையா, St. John's High School, Palamcotta. (மூன்றுவது பரிசு ரூபா 20.)

4 320 T. V. சியாமளா, St. Ebba's Girls High School, Mylapore, Madras. (நான்காவது பரிசு ரூபா 15)

5 325 R. தங்கம், St, Ebba's Girls High School, Mylapore, Madras. (ஐந்தாவது பரிசு ரூபா 12.)

6 714 T. E. சிவப்பிரகாசர், Board High School, Cheyyar at Tiruvettipuram.

2-வது வகுப்பு.

Setupati High School, Mathurai:—8, 9, 19, 20, 27, 28, 30, 33, 35, 37, 40, 42, 44 to 48, 53, 62.

Madura College High School, Mathurai:—66.

Rajah's High School, Ramnad:—73, 74, 90, 109, 113, 122, 128, 132, 138, 140, 142, 144, 148 to 150, 152, 154, 164, 166, 170, 172, 175, 176, 178, 180, 181, 183, 186.

E. R. High School, Teppakulam, Trichinopoly:—188 to 191, 196, 198, 200 to 203, 206, 207, 209, 212 to 214, 216 to 219, 222, 223, 225 to 227, 229, 230, 232, 235, 238, 240 to 145.

Board High School, Ariyalur:—246, 253.

G. S. Hindu High School, Srivilliputhur:—256, 264.

Voorhee's College High School, Vellore:—267 to 270.

Municipal High School, Vellore:— 275 to 281, 283, 285 to 300, 304, 305, 307.

St. Ebba's Girls High School, Mylapore, Madras.—310, 311 to 319, 321 to 324, 326 to 333.

Kellet High School, Triplicane, Madras:—337 to 339, 343 to 345, 347, 349, 350, 354, 356.

Hindu High School, Triplicane, Madras: — 361 to 363, 367, 369, 371, 377, 382, 384, 387 389, 390, 401 to 403.

Pachaiyappa's College School, G. T. Madras - 409, 410, 412.

Sri Ramakrishna Mission High School, (North Branch) T. Nagar, Madras:—413.

Pachaiyappa's High School, Conjeevaram:—420, 421, 423, 424, 426 to 436, 438, 440.

Anderson High School, Conjeevaram:—443, 444 to 446.

St. Mary's Girls High School, Chingleput:—447 to 449.

Municipal High School, Thiruvannamalai:—451, 452, 455, 456, 459, 460.

Muzharul Uloom High School, Ambur. (N. A. Dt.):—461.

St. John's High School, Palayamkottai:-467, 473, 477 479 to 483, 487, 488, 492, 494, 502, 505.

Board High School, Kamuthi:—513 to 516, 518.

Board High School, Polur, (N. A. Dt.)—522, 524, 526, 529, 530.

Muslim High School, Abiramam:—537, 541, 546, 548, 550, 556.

S. S. Board High School, Rajapalayam:— 561 to 568, 571 to 573, 578.

George High School, Vishnupuram. (Tanjore Dt.):—580, 581, 588, 589, 592.

P. K. N. High School, Tirumangalam:—602, 603, 607, 609, 610, 612 to 614, 616, 618, 619, 621, 623, 624, 627 to 631, 633, 636, 637, 639, 640, 642, 644, 645, 647, 648, 651, 652, 656, 659 to 662.

Board High School for Girls, Tirumaugalam:—663 to 668.

Dalmia High School Dalmiapuram:—671 to 674.

Board High School, Cheyyar, at Tiruvettipuram:— 677 to 680, 683, 685, 690 to 693, 695, 697, 698, 700, 701, 703, 704, 706 to 709, 711, 713, 715.

M. D. T. Hindu College High School, Tinnevelly:—669, 716.

St. Joseph's Girls High School, Mathurai:—717.

மதுரைத் தமிழ்ச்சங்கம், 10—6—1954.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனாதிபதி.